Puducherry / Regional Bulletin / Tamil /18.10hrs / 28.05.2026 / Script

வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : மலர்விழி

தேதி : 28.05.2026 – வியாழக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

காவல்துறை குடிமக்களை மையமாகக் கொண்டு செயல்பட வேண்டும் என்று குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

மின்சார செலவுகளைக் குறைக்க வீடுகளில், சூரிய மின்சக்தி மின் தகடுகளை பொருத்துவது அவசியம் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

பக்ரீத் பண்டிகை இன்று நாடுமுழுவதும் கோலாகலமாக கொண்டாப்பட்டு வருகிறது. இதனையொட்டி குடியரசு தலைவர், குடியரசு துணைத் தலைவர், பிரதமர் உள்ளிட்டோர் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

நாடுமுழுவதும் உள்ள ரேஷன் கடைகளை நவீனப்படுத்தும் திட்டங்களுக்கு, 25 ஆயிரத்து 530 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்ய மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

*முர்மு காவல்துறை (16)*

நாட்டின் காவல்துறை குடிமக்களை மையமாகக் கொண்டு செயல்பட வேண்டும் என்று குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார். அவர் இன்று சிக்கிம் மாநில காவல்துறைக்கு சிறப்பு வண்ணத்தை வழங்கிப் பேசினார். இது சிறப்பான சேவை, அசைக்க முடியாத கௌரவம் மற்றும் தேசத்திற்கான அர்ப்பணிப்பு ஆகியவற்றுக்காக வழங்கப்படுகிறது. இந்த விருதைப் பெறும் நாட்டின் 15ஆவது மாநிலமாகவும், வடகிழக்கிலிருந்து 3ஆவது மாநிலமாகவும் சிக்கிம் திகழ்கிறது. மேலும், காவல்துறை மக்களிடம் குறிப்பாக பெண்கள், ஏழைகள், மற்றும், குழந்தைகளிடம் அதிக கவனத்துடன் நடந்துகொள்ள வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார். இணையவழிக் குற்றங்கள், ஆன்லைன் மோசடி போன்றவற்றை சமாளிக்க காவல்துறை தயாராக இருக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். சிக்கிம் மாநில காவல்துறை அனைத்து நவீன வழிமுறைகளையும் பின்பற்றி இந்த சவால்களை சமாளிக்கும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார். சட்டம் ஒழுங்கு நிலைமைகளை பராமரிப்பதிலும், பேரிடர்களை தணிப்பதிலும், சிக்கிம் காவல்துறையின் பங்கை அவர் பாராட்டினார்.

*தர்மேந்திர பிரதான் (17)*

மத்திய இடைநிலை கல்வி வாரியம் புதிதாக அறிமுகப் படுத்தியுள்ள திரையில் மதிப்பிடும் முறையானது அதிக வெளிப்படைத் தன்மையை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்ட ஒரு முற்போக்கான கருவி என மத்திய கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார். புதுடெல்லியில் CBSE அதிகாரிகளுடன் நடத்திய கூட்டத்திற்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், CBSE 12ஆம் வகுப்பு தேர்வுக்கான OSM அமைப்பில் உள்ள முரண்பாடுகள் மற்றும் மதிப்பீட்டு இணையதளத்தில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறுகள் குறித்த கவலைகளுக்கு அவர் பதிலளித்துப் பேசினார். நடைபெற்று வரும் மறு மதிப்பீட்டு செயல்பாட்டின் போது அனைத்து குறைபாடுகளும் சரி செய்யப்படும் என அவர் நம்பிக்கை தெரிவித்தார். இந்தியாவில் உள்ள பல்கலைக் கழகங்கள் மற்றும் நிறுவனங்களும், உலகெங்கிலும் உள்ள பல நிறுவனங்களும், OSM அமைப்பை நோக்கி நகர்ந்து வருவதாக தெரிவித்தார். மேலும், CBSE இந்த அமைப்பை செயல்படுத்துவது இதுவே முதல்முறை என்றும் OSM செயல்முறை மூலம் கிட்டத்தட்ட 40 கோடி ஸ்கேன் பக்கங்கள் முதல்முறையாக மதிப்பீடு செய்யப்பட்டன என்றும் அவர் குறிப்பிட்டார்.

*தர்மேந்திர பிரதான் -2 (06)*

மாணவர்கள் தங்கள் மதிப்பெண் விவரங்களை வெளிப்படையாக அணுகவும், தங்களது விடைத்தாள்களின் ஸ்கேன் செய்யப்பட்ட நகல்களை நேரடியாகப் பார்க்கவும் OSM அமைப்புகள் வகை செய்வதாகவும் அவர் தெரிவித்தார். இதன் மூலம் மதிப்பீட்டின் போது ஏதேனும் விடையோ அல்லது பிரிவோ கவனிக்கப்படாமல் விடப்பட்டதா என்பதை அவர்கள் சரிபார்க்க முடிகிறது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

*சிவராஜ் சிங் சௌஹான் -1 (04)*

நாட்டில் கடினமாக உழைக்கும் விவசாயிகளின் அயராத முயற்சியால் போதுமான அளவு உணவு தானிய இருப்பு கையிருப்பில் உள்ளதாக மத்திய வேளாண் மற்றும் விவசாய நலத்துறை அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

இது குறித்து கூடுதல் தகவல்கள்…

(வாய்ஸ்)

*சிவராஜ் சிங் சௌஹான் -2 வாய்ஸ் (15)*

(வாய்ஸ்)

புதுடெல்லியில் இன்று நடைபெற்ற காரீப் பருவத்திற்கான தேசிய வேளாண் மாநாட்டின் துவக்க விழா நிகழ்ச்சியில் பங்கேற்றுப் பேசிய விவசாய நலத்துறை அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான், இந்த ஆண்டு நாட்டின் மதிப்பிடப்பட்ட உணவு தானிய உற்பத்தி 376 மில்லியன் டன்களுக்கும் அதிகமாக உள்ளது என தெரிவித்தார். இது கடந்த ஆண்டைவிட 5.3 சதவிகிதம் அதிகம் என்றும் சுட்டிக்காட்டினார். வேளாண்மைக்கும் விவசாயிகளின் நலனுக்கும் அரசு சிறப்பு முக்கியத்துவம் அளித்துள்ளதாக அவர் தெரிவித்தார். சீனாவை பின்னுக்குத் தள்ளி இந்தியா உலகின் மிகப்பெரிய அரிசி உற்பத்தியாளராக உருவெடுத்துள்ளது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். காரீப் வேளாண்மைத் துறையின் நலனுக்கான ஒரு செயல்திட்டத்தை உருவாக்க இந்த 2 நாள் மாநாடு உதவும் என்று அவர் தெரிவித்தார். இயற்கை வேளாண்மை, ஒருங்கிணைந்த வேளாண்மை, மற்றும், பிற துறைகள் குறித்து விவாதிப்பதற்கு இந்த மாநாடு உதவிகரமாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

*சூரிய சக்தி மின்சாரம் மோடி (08)*

மின்சார செலவுகளைக் குறைக்க வீடுகளில் சூரிய மின்சக்தி மின் தகடுகளை பொருத்துவது அவசியம் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி

தெரிவித்துள்ளார். புதுடெல்லியில் நேற்று நடைபெற்ற 51ஆவது பிரகதி கூட்டத்திற்கு தலைமை வகித்து உரையாற்றிய அவர், தற்போதைய சூழலில் மின்சார செலவுகளைக் குறைத்து, எரிசக்தி பாதுகாப்பை மேம்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். வீடுகள் மற்றும் குடியிருப்பு பகுதிகளிலும் பொது நிறுவனங்களிலும், சூரிய சக்தி தகடுகளைப் பொருத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

*பக்ரீத் பொது -1 (14)*

ஈகைத் திருநாளாம் பக்ரீத் பண்டிகை இன்று கோலாகலமாக கொண்டாப்பட்டு வருகிறது. பல்வேறு மசூதிகளில் இன்று நடைபெற்ற சிறப்புத் தொழுகையில் ஈடுபட்ட இஸ்லாமியர்கள் ஏழைகளுக்கு தானங்களை வழங்கினர். ரம்ஜான் பண்டிகைக்கு அடுத்தபடியாக இஸ்லாமியர்களின் முக்கிய திருநாளாக விளங்கும் பக்ரீத் பண்டிகை, இறை நம்பிக்கை, சகோதரத்துவம், இரக்கம், நல்லிணக்கம் மற்றும் தியாகத்தைப் போற்றும் வகையில் கொண்டாடப்படுகிறது. புதுச்சேரியில் இதனையொட்டி பல்வேறு மசூதிகளில் நடைபெற்ற சிறப்புத் தொழுகையில் ஆயிரத்திற்கு மேற்பட்ட இஸ்லாமியர்கள் பங்கேற்றனர். இவர்கள் புத்தாடை அணிந்து ஒருவருக்கொருவர் கட்டித்தழுவி பக்ரீத் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொண்டனர். முடிவில் இறைவனுக்கு தங்கள்

கடமைகளை நிறைவேற்றும் வகையில் ஏழை எளிய மக்களுக்கு குர்பானி தானமாக வழங்கப்பட்டது.

*தலைவர்கள் பக்ரீத் வாழ்த்து - (17)*

பக்ரீத் பண்டிகை தியாகம், தன்னலமற்ற குணம் ஆகியவற்றின் அடையாள சின்னம் என்று குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார். பக்ரீத் பண்டிகையை முன்னிட்டு அவர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், மனித குலத்திற்கு, குறிப்பாக நலிவடைந்தவர்களுக்கு சேவை செய்ய நம்மைத் தூண்டுவதாக குறிப்பிட்டுள்ளார். இந்த நல்ல தருணத்தில் சமூகத்தில் அண்மையில் நல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்கான நமது உறுதியை வலுப்படுத்துவோம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், இந்த புனித திருநாள் அனைவருக்கும் மகிழ்ச்சி, அமைதி, மற்றும், நல்லிணக்கத்தைக் கொண்டு வரும் என நம்பிக்கை தெரிவித்தார்.

பிரதமர் திரு. நரேந்திரமோடி வெளியிட்டுள்ள பக்ரீத் வாழ்த்துச் செய்தியில், இப்பண்டிகை சமூகத்தில் சகோதரத்துவம் மற்றும் மகிழ்ச்சியின் உணர்வை வலுப்படுத்தும் என குறிப்பிட்டுள்ளார்.

அனைவரின் நல் ஆரோக்கியத்திற்காக பிரார்த்தனை செய்து கொள்வதாக அவர் தமது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

*ரேஷன் கடை -1 (17)*

நாடுமுழுவதும் உள்ள ரேஷன் கடைகளை நவீனப்படுத்தும் திட்டங்களுக்கு, 25 ஆயிரத்து 530 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்ய மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவைக் கூட்டம் பிரதமர் திரு.நரேந்திரமோடி தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு.அஸ்வினி வைஷ்ணவ் புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் விளக்கினார். ரேஷன் கடைகளை நவீனப்படுத்துதல், உணவு தானியங்களை கொண்டு செல்லும் மாநில ஏஜென்சிகளுக்கு உதவுதல் உள்ளிட்ட திட்டங்களுக்கு 25 ஆயிரத்து 530 கோடி ரூபாய் நிதி வழங்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதாக அவர் தெரிவித்தார். மேலும் உணவு தானியங்களை கையாள்வதற்கு மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கான செலவினங்களை மத்திய அரசின் சார்பில் உதவும் மற்ற நடவடிக்கைகளை சீரமைப்பதற்கும், மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. தேசிய உணவுப் பாதுகாப்புச்

சட்டத்திற்கு 81 கோடியே 35 லட்சம் மக்களுக்கு உணவு வழங்கப்படுவதை உறுதி செய்யும் மத்திய அரசின் இலக்கை நிறைவேற்ற இந்த திட்டம் உதவும்.

*ரேஷன் கடை -2 (09)*

அதே நேரத்தில் தற்போது நடைமுறையில் உள்ள பொது விநியோகத் திட்டத்திற்கு இத்திட்டம் மாற்றான ஒன்றாக இருக்காது என்றும் திரு.அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார். ரேஷன் திட்டங்களுக்கு மத்திய அமைச்சரவை நிதி ஒதுக்கீடு செய்திருப்பதற்கு மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா பாராட்டு தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், வறுமை மீட்புத் திட்டங்களை தொழில்நுட்பம் மூலம் மேம்படுத்தவும், வெளிப்படைத் தன்மையை உறுதிப்படுத்தவும், மத்திய அரசு அதிக கவனம் செலுத்தி வருவதாக தெரிவித்துள்ளார்.

*எபோலா -1(03)*

எபோலா வைரஸ் பரவலைத் தடுக்கும் புதிய தடுப்பூசியை ரஷ்ய விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளதாக, ரஷ்ய சுகாதாரத் துறை தலைவர் தெரிவித்துள்ளார். இது குறித்து கூடுதல் தகவல்கள்...

(வாய்ஸ்)

*எபோலா -2 வாய்ஸ் (12)*

(வாய்ஸ்)

காங்கோ மற்றும் உகாண்டா நாடுகளில் எபோலா வைரஸ் பரவல் அதிகரித்து வரும் வேளையில் சர்வதேச சுகாதார நிதியின் கீழ் பொது சுகாதார அவசர நிலையை உலக சுகாதார அமைப்பு கடந்த 17ஆம் தேதி அறிவித்துள்ளது. இதனை அடுத்து உகாண்டா மற்றும் காங்கோ நாடுகளில் விமானங்களை இயக்கும் நிறுவனங்கள், பயணிகள் இறங்குவதற்கு முன்பு சுயஅறிவிப்பு படிவங்களைக் கட்டாயம் பூர்த்தி செய்து வழங்க வேண்டும் என உத்தரவிட்டுள்ளது. இந்நிலையில் காங்கோ நாட்டில் பரவியுள்ள எபோலா வைரஸ் நோயைக் கட்டுப்படுத்த புதிய தடுப்பூசியை ரஷ்ய விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளதாக தென்னாப்பிரிக்காவில் உள்ள ரஷ்ய தூதரகம் தெரிவித்துள்ளது.

*சவார்க்கர் (16)*

சுதந்திரப் போராட்ட வீரர் வீர சவார்க்கரின் துணிச்சல் மற்றும் தேச பக்தி மக்களை எப்போதும் ஊக்குவிக்கும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். வீர சவார்க்கரின் பிறந்த தினத்தை முன்னிட்டு, அவர் வெளியிட்டுள்ள சமூக ஊடகப்பதிவில் இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார். வீர சவார்க்கரின் அறிவுக்கூர்மையில் சமூக

சீர்திருத்தத்தின் மீதான அவரது வலியுறுத்தலும், குறிப்பிடத்தக்கது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி குறிப்பிட்டுள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா வெளியிட்டுள்ள செய்தியில், சுதந்திர போராட்டத்தின் அச்சமற்ற போர் வீரரான வீர சவார்க்கர், தனது முழு வாழ்வையும், தாய்நாட்டின் சேவைக்காக அர்ப்பணித்தார் என குறிப்பிட்டுள்ளார். தேசத்தின் மீதும், ஒரு குறிப்பிட்ட சித்தாந்தத்தின் மீதும் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவர் அவர் என திரு. அமித்ஷா மேலும் தெரிவித்தார். தீண்டாமை போன்ற சமூக தீமைகளை வீர சவார்க்கர் தனிமையாக எதிர்த்ததாகவும், நாட்டு மக்களை ஒருங்கிணைத்ததாகவும் அமைச்சர் கூறியுள்ளார். அவரது வாழ்க்கை தொடர்ந்து வழிகாட்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

காவல்துறை குடிமக்களை மையமாகக் கொண்டு செயல்பட வேண்டும் என்று குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

மின்சார செலவுகளைக் குறைக்க வீடுகளில், சூரிய மின்சக்தி மின் தகடுகளை பொருத்துவது அவசியம் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

பக்ரீத் பண்டிகை இன்று நாடுமுழுவதும் கோலாகலமாக கொண்டாப்பட்டு வருகிறது. இதனையொட்டி குடியரசு தலைவர், குடியரசு துணைத் தலைவர், பிரதமர் உள்ளிட்டோர் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

நாடுமுழுவதும் உள்ள ரேஷன் கடைகளை நவீனப்படுத்தும் திட்டங்களுக்கு, 25 ஆயிரத்து 530 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்ய மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது. RM/MS/VM

Puducherry / Regional Bulletin / Tamil /18.10hrs / 28.05.2026 / Script